IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 38/2021 |
| | | P/W's | : | **PW 1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | சித்ரா | CASTE | : | – |
| S/O. | சரவணன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | ஆண்டிப்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 47 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.10.2024**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

**1.** நான் எங்கள் ஊர் தபால் அலுவலகத்திற்கு சென்று வருவேன், தபால் அலுவலகத்திற்கு செல்லும் வழியில்தான் வழக்குச்சொத்து உள்ளது. வழக்குச் சொத்தில் இதற்கு முன்பாக எனது சித்தப்பா குருநாதன் பெட்டிக்கடை நடத்தி வந்தார். எனது சித்தப்பாவிற்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளார்கள். அவரது மனைவி பெயர் சாந்தி. மகன் பெயர் கார்த்தி.மகள் பெயர் காயத்ரி. எனது சித்தப்பா குருநாதன் எனது தாத்தா முத்துரெட்டியாரின் வாரிசு ஆவார்.

2. வா.சா.ஆ.9ஆவணத்தில் எனது தாத்தா முத்து ரெட்டியாருக்கு சீனிவாசன் என்பவர் மட்டுமே வாரிசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது தாத்தாவிற்கு குருநாதன், சீனிவாசன், லெட்சுமி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். எனது தாத்தாவின் வாரிசுகளை மறைத்து வா.சா.ஆ.9 வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. குருநாதன் மனைவி, மற்றும் மகன் உயிருடன் உள்ளார்கள்.

3. வழக்குச்சொத்தை எனது தாத்தா முத்துரெட்டியார் கிரையம் வாங்கினார், அதனால் அவரது அனைத்து வாரிசுகளுக்கும் வழக்குச்சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரிதான். முத்து ரெட்டியாரின் அனைத்து வாரிசுகளை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.7 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடிதான் வழக்குச் சொத்து

அமைந்துள்ளது. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையுடன் தாக்கல் செய்த வரைபடம் நீ.ம.சா.ஆ.2ன்படிதான் வழக்குச்சொத்தில் கடைகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7ன் ஆவணத்தின்படி வாலகுருவா ரெட்டியார்க்கு 5 அடி பாத்தியம் என்றும், பிராதில் வாலகுருவா ரெட்டியாருக்கு 6 1/4 அடி பாத்தியம் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் வாலகுருவா ரெட்டியாருக்கு 6 1/4 அடி தான் பாத்தியம்.

5. வாலகுருவா ரெட்டியாருக்கு பிராதுப்படி 8 3/4 அடி பாத்தியம் என்று கணக்கிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துரெட்டியார் வாங்கிய இடத்தையும் சேர்த்து சொல்லி உள்ளேன்.

6. நாகுரெட்டியாரின் மகன் ராமு ரெட்டியாரின் மனைவி கோதையம்மாளுக்கு 1 1/4 x 33 அடி என்று பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரையப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனையாளர்களான ஜெயசீலன் மற்றும் ராஜு ஆகியோர் எனது தகப்பனார் சீனிவாசனுக்கு இடத்தை விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரையப்பத்திரத்தில் விற்பனை செய்யப்பட்ட இடம் 1 1/2 X 33 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரையப்பத்திரத்திலும் பிராதில் எனக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு அடி கணக்கு மாறுபடுகிறது என்றால் வழக்குரையில் சொல்லியுள்ளது தான் சரியானது.

7. எனது சித்தப்பா குருநாதன் வழக்குச்சொத்தில் கடை வைத்திருந்தபோது சப்பாணி என்ற ராமச்சந்திரனுக்கு பாத்தியப்பட்ட இடத்தை பிரதிவாதி 2001ம் வருடம் கிரையம் வாங்கியது எனக்குத்தெரியும். பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தில் ஒயின்சாப் நடத்தினார், எனது சித்தப்பா இடத்திற்கு பின்பக்கம் Bar நடத்தினார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி அவர் Bar வைத்திருந்த இடத்திற்கு எனது சித்தப்பா குருநாதனுக்கு வாடகை கொடுத்துவந்தார் என்றால் எனக்குத்தெரியாது. Bar இருந்த இடத்தில் தான் தற்போது செருப்புக்கடை உள்ளது என்றால் சரிதான்.

8. சப்பாணி என்ற ராமச்சந்திரன் அவர் பாகத்தில் ஜா ஓட்டல் கடை வைத்திருந்த இடத்தை பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஓட்டல்கடை இருந்த இடத்தில் தான் பிரதிவாதி ஒயின்சாப் நடத்தினார் என்றால் எனக்கு தெரியாது. சப்பாணி என்ற ராமச்சந்திரனிடம் பணம் கொடுத்துதான் கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. சப்பாணி என்ற ராமச்சந்திரன் அனுபவம் செய்த இடத்தை தான் பிரதிவாதி கிரையம் பெற்றார், அந்த இடத்தை அவர் மாற்றவில்லை என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி 2009ம் வருடம் எனது தந்தை சீனிவாசன், அழகர்சாமியின் 3ல் 1 பங்கான பிரிபடாத சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.வா.சா.ஆ. 3ஆவணத்தின் சொத்துப் பட்டியலில் கிழக்கே பிரதிவாதி யின் சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தை கிரையம் வாங்கியகாலத்தில் பிரதிவாதியின் சொத்துப்பற்றி எனக்குத்தெரியும். எனது தந்தை கிரையம் வாங்கிய காலத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருந்தால் பிரதிவாதியின்சொத்துப்பற்றி எங்கள்பத்திரத்தில் குறிப்பிடாமல் அப்போதே நடவடிக்கை எடுத்துருப்போம் என்றால் சரியல்ல.

10. பிரதிவாதி 2001ம் வருடம் 9ம் மாதத்தில் வழக்குச்சொத்தில் ஆக்கிரப்பு செய்ய முயற்சி செய்தார். சப்பாணி என்ற ராமச்சந்திரனிடமிருந்து இடத்தை கிரையம் வாங்கிய அன்றே பிரதிவாதி கட்டிடம் கட்டி அதை வாடகைக்கு விட்டு ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்வதற்குமுன் அந்த இடத்தில் என்ன இருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை.

11. பிரதிவாதியின் பத்திரத்தை ரத்து செய்யுமாறு எனது அண்ணன் 2019ம் வருடம் ஜனவரி மாதம் கேட்டார். நான் எனது அண்ணனுடன் செல்லவில்லை. நான் சொல்லுவதுபோல் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் வழக்குச்சொத்தை அளந்தபோது நான் அங்கு இருந்தேன். வழக்கறிஞர் ஆணையர் பிரச்சனை குறித்த இடத்தைதான் அளந்தார், சாட்சி அவராகவே வழக்கறிஞர் ஆணையர் மொத்த இடத்தையும்

அளந்ததாக கூறினார்.

12. பிரதிவாதி அவர் சப்பாணி என்ற ராமச்சந்திரனிடமிருந்து கிரையம் பெற்ற இடத்தில் தான் அனுபவம் செய்து வருகிறார் அவர் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை, வழக்கிற்காக சம்பந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து எனது தாத்தாவின் வாரிசுகளை மறைத்து பொய்யாக வாரிசு சான்றிதழ் பெற்று, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**Sd/True copy**
திரு.**M.P.**ராம்கிஷோர்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.